மற்ற சங்கங்களைவிடப் பெரிய சங்கம் என்பதால், மற்ற சங்கங்களுக்கு அளிப்பதுபோல் இல்லாமல் அதற்கு அதிகப்படியான உதவிகளை அரசு அளிக்குமா? நஷ்டத்தில் நடக்கின்ற சங்கங்களுக்குத்தான் உதவி அளிப்பது என்ற கொள்கை இருக்கிறதே, அதை மாற்றி லாபத்தில் நடக்கின்ற சங்கங்களுக்கும் உதவிகளை அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இதை நன்றாக நடத்துகிறார்கள் என்று அரசாங்கம் பெருமையோடு கருதிக்கொண்டிருக்கிறது. ஆகவே, உதவிகளைக் கேட்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is there any reduction in the production of the mat weaving industry in recent years due to competition from other industries like plastics industry?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றிய விவரம் இல்லை.

Industrial Liaison Board

* 194 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have any proposal to form an Industrial Liaison Board ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ). இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Sir, was any proposal brought before the Government to find out the needs of each industry and then to train technical persons to suit the needs of each industry so that proper technical persons can be given to the various industries. Also, whether such a proposal was not recommended by the Technical Education Department?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்குத் தேவையானவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வேலை வாய்ப்பைத் தர வேண்டுமென்ற முயற்சியை மேற்கொள்ளும் வகையில் மாநில அளவிலே தொழில் அதிபர்களையும் இந்தத்

தொழில் பயிற்சிக்கூடங்களை நடத்துபவர்களையும் மாநில அரசு அழைத்துப் பேசியது. அந்த அந்த மாவட்டத்திலே குழு அமைத்து, அந்த அந்த மாவட்டத்திலே இருக்கிற இண்டஸ்டிரியல் டிரெயினிங் இன்ஸ்டிட்டியூட் நிர்வாகிகளையும், தொழிலதிபர்களையும் உள்ளடக்கி, எப்படிப்பட்ட டிரேட்ஸுக்கு, எந்தெந்த தொழிற்சாலைகளிலே வாய்ப்பு இருக்கிறது என்று ஆராய்ந்து, அந்தந்த பயிற்சியை அந்தந்த தொழிற்சாலைகளிலே கொடுக்க வேண்டுமென்று அரசு ஏற்பாடு செய்தது.

DR. H. V. HANDE: Have this Government got in touch with other progressive States like Maharashtra, Punjab and Haryana to find out whether it is practised there and if so, whether this Government are prepared to implement it as early as possible and if possible in the next year itself?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது நடைபெற்று ஓராண்டு இருக்கும். ஆகவே, ஏற்கனவே, இதுநடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இதைச் செய்வது என்று முடிவு செய்திருக்கிறோம். இப்பொழுது பயிற்சி பெற்றிருக்கிறவர்களிலே வேலையில்லாமல் பல்லாயிரக்கணக்கானவர்கள் மத்தியில் தேக்கம் இருக்கிறது. எதிர் காலத்தில் எப்படிப்பட்டவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும், எந்த எந்தத் துறையிலே பயிற்சி கொடுக்கவேண்டுமென்று ஆங்காங்குள்ள மாவட்ட தேவைகளை ஆராய்ந்து டைரக்டர் ஆப் எம்ப்ளாய்மென்ட் அண்ட் டிரெய்னிங் எந்தெந்த ஐ.டி.ஐ. நிலையங்களுக்கு இந்த டிரேட்ஸ் மாற்றம் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது இப்பொழுதே செயல்பட்டு வருகிறது.

Release of water from Mettur Dam

* 195 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any prospect of early release of water from Mettur for irrigation this year; and

(b) if so, the probable date by which water would be released?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) பாசனத்திற்காக, மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து 7—7—1972-இல் நீர் திறந்து விடப்பட்டது.